நேர்மை, செயல்சிறப்பு, கூட்டுச்செயல்பாடு, கடமைப்பாடு

# மதிப்பீடுகளை நடைமுறைப்படுத்தல்

கேட்டர்பில்லரின் உலகளாவிய நன்னடத்தை நெறிமுறைகள்

CATERPILLAR®

**நமது தலைவரிடமிருந்து ஒரு செய்தி** ........ 2
**நடத்தை மீறாமை** ........ 5
**அறிவிப்பு உரிமைகள் & பொறுப்புகள்** ........ 6
**தண்டனை இன்மைக் கொள்கை** ........ 6

**நேர்மை** ........ 9
- நேர்மை & ஒருங்கிணைப்பு ........ 10
- கருத்து வேறுபாடுகள் ........ 10
- போட்டிக்குரிய நடத்தை ........ 11
- நிதி அறிக்கைகள் & கணக்கீடு ........ 11
- நியாயமான தொடர்பு ........ 12
- உள்புற தகவல்கள் ........ 12
- பொருத்தமற்ற வெகுமதிகள் ........ 13

**செயல்சிறப்பு** ........ 15
- தயாரிப்பு & சேவை தரம் ........ 16
- வாடிக்கையாளர்களுக்கான மதிப்பீடு ........ 16
- பணிச் சூழல் ........ 17
- ஊழியர் செயல்திறன் ........ 17
- ஊழியர் மேம்பாடு ........ 18
- இடர் மேலாண்மை ........ 18
- நிறுவனத்தின் கண்ணோட்டத்தில் பார்த்தல் ........ 19

**கூட்டுச்செயல்பாடு** ........ 21
- மதிப்பு & தொல்லையின்மை ........ 22
- நியாயத்தன்மை & பாகுபாடின்மை ........ 22
- உள்ளடக்கச் சூழல் ........ 23
- உலகளாவிய தர நிலைகள் ........ 23
- வெளிப்புற அமைப்புகள் ........ 24
- டீலர்கள் & விநியோகிப்பாளர்கள் ........ 24
- சப்ளையர்கள் ........ 25

**கடமைப்பாடு** ........ 27
- ஆரோக்கியம் & பாதுகாப்பு ........ 28
- சூழல் & நிலைபெறுதன்மை ........ 28
- தனிப்பட்ட பொறுப்பு ........ 29
- சொத்துக்களை பாதுகாத்தல் ........ 29
- இரகசிய தகவல்கள் ........ 30
- மின்னணு தகவல்தொடர்புகள் ........ 30
- தனிப்பட்ட தனியுரிமை ........ 30
- சமூகங்கள் ........ 31
- உரிமைத்துவம் & முதலீடு ........ 31
- பொது விஷயங்கள் ........ 31

**நிறுவனக் கோட்பாடுகள்** ........ 32
**விலக்கு** ........ 32

## இந்த உலகம் தொடர்ச்சியாக மாறுவதைப் போலவே, நமது பிஸினஸும் மாறுகிறது. உயர்ந்தபட்ச நெறிமுறை தரநிலைகளை பராமரிக்கும் நமது கடமைப்பாடு எப்பொழுதும் மாறுவதில்லை. நமது நற்பெயர், நமது தலை சிறந்த சொத்துக்களில் ஒன்றாகும். இதை ஒவ்வொரு நாளும் பாதுகாப்பதற்கு நாம் ஒவ்வொருவரும் பொறுப்பாகிறோம்.

சவால்களை சந்திக்கையில் அதை எப்படி எதிர்கொள்கிறோம் என்பதே நம்மை வரையறுக்கிறது. நமது முடிவுகள், இறுதியாக நமது செயல்பாடுகள் ஆகியவை கேட்டர்பில்லரில் நாம் யார் என்று உலகிற்கு தெரிவிக்கின்றன.

அதனால்தான் நமது உலகளாவிய நன்னடத்தை நெறிமுறைகள் முக்கியமானதாக இருக்கிறது. 1974ஆம் ஆண்டு இது முதன்முதலில் வெளியிடப்பட்டதிலிருந்து, கேட்டர்பில்லர் குழுவில் ஒரு பகுதியாக இருப்பதை அது வார்த்தைகளில் விளக்குகிறது. நமது நோக்கங்களின் உயர்ந்த எதிர்பார்ப்புகள், நாம் எதை நம்புகிறோம் மற்றும் நமது நிறுவனம் முழுவதும் நமது மதிப்பீடுகளை செயலில் எவ்வாறு அமைக்கிறோம் என்பதை நன்னடத்தை நெறிமுறைகள், ஆவணப்படுத்துகிறது மற்றும் அமைக்கிறது.

கேட்டர்பில்லர் ஊழியர்கள் உலகின் ஒவ்வொரு மூலையிலும் வாழ்கிறார்கள் மற்றும் பணிபுரிகிறார்கள். தனித்துவமான கலாச்சாரங்கள் மற்றும் அனுபவங்கள், கல்வி மற்றும் திறன்கள் ஆகியவற்றின் சேகரிப்பானது நம்மை இன்னும் வலிமையான, புத்தாக்கமான நிறுவனமாக மாற்றுகிறது. நமது வேறுபாடுகள் முக்கியமான நிலையில் இருக்கும்போது, ஒரு குழுவாக நாம் இயங்குவதற்காக நம்மை இணைப்பதற்கு நமக்கு சில விஷயங்கள் தேவைப்படுகின்றன. நமது நன்னடத்தை நெறிமுறையானது நமது தனித்துவத்தை தடைசெய்வதில்லை அல்லது ஒவ்வொரு சூழலிலும் பயன்படுத்த ஒரு குறிப்பிட்ட வழிமுறைகளை வழங்குவதில்லை. மாற்றாக, கேட்டர்பில்லர் குழுவின் ஒவ்வொரு உறுப்பினரிடமிருந்தும் என்ன எதிர்பார்க்கப்படுகிறது என்பதை தினந்தோறும் நினைவுறுத்துபவராக நெறிமுறை சேவையாற்றுகிறது.

**நேர்மை** என்பது ஒரு நயமான வார்த்தை மட்டுமே அல்ல என்று இது நமக்கு நினைவூட்டுகிறது. நாம் பொறுப்புள்ளவர்களாகவும் மற்றும் முடிவுகளை வழங்குபவர்களாகவும் மாறும்பொழுது நம் ஒவ்வொரு நாள் வாழ்வும் அர்த்தமுள்ளதாகிறது.

நாம் **செயல்சிறப்பிற்காக** கடுமையாக முயற்சிக்கும்போது, கண்டிப்பாக தரம் மற்றும் வாடிக்கையாளர்கள் மீதான தீவிரமான கவனத்தையும் நாம் கடைபிடிக்க வேண்டும் என்பதை இது நமக்கு நினைவூட்டுகிறது. நம்முடைய வாடிக்கையாளர்கள் கூறுவதைக் கேட்டு, அவர்கள் தேவைகளைப் புரிந்து கொண்டு, நாம் மதிப்பு வாய்ந்த பொருட்கள் மற்றும் சேவைகளை வழங்க வேண்டும் மற்றும் அவர்கள் வெற்றிபெற உதவும் தீர்வுகளை தர வேண்டும்.

இன்றைய உலகளாவிய சந்தையில் போட்டியிட **கூட்டுசெயல்பாட்டின்** அவசியத்தையும், சிறப்பான யோசனைகளின் தேவையையும், வழங்குவதில் உள்ள ஒழுங்குமுறைகளின் அவசியத்தையும் அது நமக்கு நினைவூட்டுகிறது. நம்முடைய ஊழியர்கள், டீலர்கள், விநியோகிப்பாளர்கள் மற்றும் சப்ளையர்களின் வேறுபட்ட திறன்களை நாம் பயன்படுத்தும்போது, நாம் எதையும் செய்து முடிப்போம்.

இறுதியாக, நமது குழுக்கள், நம்முடைய வாடிக்கையாளர்கள் மற்றும் சுற்றுச்சூழல் ஆகியவற்றுக்கு பாதுகாப்பை வழங்கும் நம்முடைய **கடமைப்பாட்டை** இது நமக்கு நினைவூட்டுகிறது. நிலைபெறு தீர்வுகளை வழங்குவதில் நாம் கவனம் செலுத்தும்போது, நம்முடைய உலகத்திற்கு சிறப்பாக சேவையாற்றும் அதே நேரத்தில் நாம் இலாபமடைய முடியும் என்பதை நாம் அறிந்திருக்கிறோம்.

மிக உயரிய மதிப்பீடுகள் மற்றும் கொள்கைகள் ஆகியவற்றுடன் நாம் செயல்படுகிறோம் என்ற நமது புகழ், நம்முடைய பாரம்பரியம் மற்றும் அதுவே நமது எதிர்காலத்திற்கான அஸ்திவாரம் ஆகும். 2005 ஆம் ஆண்டில் நம்முடைய மதீப்பீடுகளை செயலில் முதன்முதலில் அறிமுகப்படுத்தியபோது, இந்த மதிப்பீடுகள் நமது மொழி மற்றும் கலாச்சாரத்தில் விரைவாக பங்குகொண்டது குறித்து மிகவும் பெருமை கொண்டேன், ஆனால் ஆச்சரியமடையவில்லை, ஏனெனில் கேட்டர்பில்லரில் நாம் அதன் அடிப்படையில்தான் பிஸினஸை நடத்துகிறோம்.

எங்களுடைய நன்னடத்தை நெறிமுறைகளை படித்து புரிந்து கொள்வதற்கு நேரம் செலவிட்டமைக்கு நன்றி. நேர்மை, செயல்சிறப்பு, கூட்டுசெயல்பாடு மற்றும் கடமைப்பாடு ஆகியற்றில் அமைந்த நமது அடிப்படைகள் மாறவில்லை. எங்களுடைய மதிப்பீடுகள் வெறும் சொற்கள் மட்டுமல்ல. நாங்கள் யார் என்பதை அவையே வரையறுக்கின்றன, நாங்கள் செய்யும் அனைத்திலும் அவையே முன்னிலை வகிக்கும்.



**டக்ளஸ் ஆர். ஓபர்ஹெல்மன் (DOUGLAS R. OBERHELMAN)**
தலைவர் மற்றும் தலைமைச் செயல் அலுவலர்



# நடத்தை மீறாமை

## நேர்மை, செயல்சிறப்பு, கூட்டுச்செயல்பாடு, கடமைப்பாடு.

இந்த நன்னடத்தை நெறிமுறைகளே நம்மை வரையறுக்கின்றன. புவியியல், கலாச்சாரம், மொழி மற்றும் பிஸினஸ் ரீதியில் நாம் பிளவுபட்டிருந்தாலும் நாம் ஒரே கேட்டர்பில்லரைச் சார்ந்தவர்கள். மிக உயரிய நடத்தைத் தரத்துக்கான கொள்கையும் அதை நிறைவேற்றுவதில் கடமையுணர்வும் கொண்டு அவற்றால் பிணைக்கப்பட்ட ஒரே நிறுவனமாவோம்.

சட்டம் மற்றும் ஒழுங்குமுறைக்கு உட்பட்டு நாம் நமது பிஸினஸை செய்யும்போது, நம்மைப் பொறுத்தவரை இந்த விதிமுறைகளை வெறுமனே பின்பற்றினால் மட்டுமே போதாது. அதற்கும் அப்பால் போக கடுமையாக முயற்சி செய்ய வேண்டும். நமது நன்னடத்தை நெறிமுறைகள் மூலம், நாமே பெருமைப்படத்தக்க ஒரு பணிச்சூழல் உருவாகும் என எதிர்பார்க்கிறோம், அவற்றால் இந்த நிறுவனத்தை மற்றவர்கள் பார்த்து மதிக்கவும் பாராட்டவும் வேண்டும், நமது செயல்பாடுகள் மூலம் நல்லதோர் உலகம் படைக்க உதவவும் வேண்டும். மேலும் மேலும் வெற்றியை ஈட்டித்தரக்கூடிய அளவுக்கு மதிப்புசார்ந்த கலாச்சாரத்தை உருவாக்குவதற்கான அஸ்திவாரத்தை நாம் ஒன்றிணைந்து உருவாக்குகிறோம். நாம் ஒன்றிணைந்து உலகத்தின் மிகச்சிறந்த நிறுவனங்களில் ஒன்றின் புகழை உயர்த்திப் பிடிக்கிறோம், அத்துடன் அதை மேலும் வலுவாக்குகிறோம்.

கேட்டர்பில்லர் இங்க்.-இன் ஊழியர்கள் அனைவருக்கும் இந்த நடத்தை விதிமுறைகள் பொருந்தும். அத்துடன் அதன் கிளை நிறுவனங்கள், உலகெங்கிலும் உள்ள சார்பு நிறுவனங்கள் மற்றும் கேட்டர்பில்லர் இங்க்.-இன் போர்டு ஆஃப் டைரக்டர்கள் அனைவருக்கும் இது பொருந்தும். இந்த நன்னடத்தை நெறிமுறைகளை நாம் ஒவ்வொருவரும் படிக்கவும், புரிந்துகொள்ளவும், எப்போதும் நடைமுறைப்படுத்தவும் பொறுப்பு உடையவர்களாவோம். நமது நிறுவனத்தில், மற்றவர்களை முன்னின்று வழிநடத்தும் ஊழியர்கள், "நடத்தை மீறாமை" என்பதன் பொருள் என்ன என்பதற்கு எடுத்துக்காட்டாக நடந்து காட்டும் விசேஷ பொறுப்பைக் கொண்டுள்ளனர்.

# அறிவிக்கும் உரிமையும் பொறுப்புகளும்

நன்னடத்தை நெறிமுறைகள், நிறுவன கொள்கை அல்லது பொருந்தக்கூடிய சட்டம் போன்றவற்றை, மீறக்கூடிய அல்லது மீறுவதாக தோன்றக்கூடிய சூழ்நிலைகள் அல்லது செயல்களை நீங்கள் அறிய வந்தால், உங்கள் மேற்பார்வையாளரை அல்லது உள்ளூர் நிர்வாகத்தை கூடிய விரைவில் தொடர்பு கொள்ளுங்கள். நன்னடத்தை நெறிமுறைகள், நிறுவன கொள்கை அல்லது பொருந்தக்கூடிய சட்டங்கள் ஆகியவற்றை மீறுகிற அல்லது மீறுவதாகத் தோன்றுகிற எந்த ஒரு சூழல் அல்லது நடவடிக்கை குறித்து தெரிவிக்கும் உரிமையும் பொறுப்புணர்வும் நம் ஒவ்வொருவருக்கும் கூடுதலாக தனிப்பட்ட முறையில் உள்ளது. இந்த உரிமையை நாம் பொறுப்புணர்வுடன் செயல்படுத்தவேண்டும். மீறல் இருப்பது குறித்து காரணபூர்வமாக நம்பினால் மட்டுமே அது குறித்து அறிவிப்பு அளிக்கவேண்டும். மற்றவர்களுக்கு பிரச்சனைதர வேண்டும் என்புதற்காக மட்டுமோ தனிநபர் அபிப்பிராயத்தின் அடிப்படையில் மட்டுமோ அல்லது அற்பமானதாகவோ இது இருக்கக்கூடாது. இது குறித்த உங்கள் கேள்வியையோ அல்லது கவலையையோ நீங்கள் எழுப்பலாம் அல்லது உங்கள் சூப்பர்வைஸர், உள்ளூர் பிஸினஸ் யூனிட் மானேஜ்மென்ட் அல்லது ஆபீஸ் ஆஃப் பிஸினஸ் ப்ராக்டிஸஸுக்கு நீங்கள் எழுதலாம்.

நன்னடத்தை விதிகளின் கீழ், உங்கள் சூப்பர்வைஸர் அல்லது உள்ளூர் பிஸினஸ் நிர்வாகிகளிடமிருந்து ஒரு பதிலை நீங்கள் பெறவில்லை அல்லது அவர்களால் உங்கள் பிரச்னை தீர்க்கப்படவில்லை என்று நீங்கள் நினைத்தால், நீங்கள் ஆபீஸ் ஆஃப் பிஸினஸ் ப்ராக்டிஸஸை அணுகலாம்:

**நேரடி தொலைபேசி:** +1-309-494-4393 (ஆங்கிலம் மட்டும்)

**கட்டணமில்லா உதவிஎண்:** கேட்டர்பில்லர் பல நாடுகளில் கட்டணமில்லா தொலைபேசி வசதியை அளித்திருக்கிறது. கனடா, யுனைட்டட் ஸ்டேட்ஸ் மற்றும் யு.எஸ். வர்ஜின் தீவுகளுக்கு மட்டும் இந்த எண்ணானது, 1_800_300_7898. தற்போது கட்டணமில்லா தொலைபேசி எண்கள் செயல்பாட்டில் உள்ள பிற நாடுகள் கேட்டர்பில்லர் இன்ட்ராநெட்டில் https://codeofconduct.cat.com என்ற முகவரியில் கிடைக்கிறது. அந்த எண்களுக்கு மொழி பெயர்ப்புகள் கிடைக்கின்றன. அநாமதேய புகாரளித்தல்கள் அனுமதிக்கப்படும் நாட்டில் இருந்து அழைக்கும்போது, நீங்கள் அநாமதேயராகவே இருந்து கொள்ளலாம்.

**அழைப்பு சேகரிப்பு உதவிஎண்:** +1-770-582-5275 (மொழிபெயர்ப்பு கிடைக்கிறது)

**இரகசிய தொலைநகல்:** +1-309-494-4818

**மின்னஞ்சல்:** BusinessPractices@cat.com

மேற்கண்ட எந்த முகவரி மூலமும் நீங்கள் ஆபிஸ் ஆஃப் பிஸினஸ் ப்ராக்டிஸஸ் டேடா பிரைவஸி ஸ்டேட்மென்ட்டின் நகல் ஒன்றைக் கேட்டுப் பெறலாம்.

# தண்டனை இன்மைக் கொள்கை

நல்ல எண்ணத்தோடு நீங்கள் எழுப்பும் தார்மீக நிலை குறித்த எந்த கேள்விக்காகவும் கேட்டர்பில்லர் உங்களுக்கு எதிராக எந்த நடவடிக்கையும் எடுக்காது. அது போலவே நல்ல எண்ணத்தோடு ஒரு ஊழியர் கேள்வியை எழுப்பிய காரணத்தால் அல்லது புகார்செய்ததால் வேறு ஒருவர் அவரைத் தண்டிக்க முன்வந்தால் அதைப் பார்த்துக்கொண்டும் கேட்டர்பில்லர் சும்மா இருக்காது.

# மதிப்பீடுகளை நடைமுறைப்படுத்தல்

கேட்டர்பில்லரின் உலகளாவிய
நன்னடத்தை நெறிமுறைகள்

## நேர்மை
**நியாயத்தின் ஆற்றல்**

## செயல்சிறப்பு
**தரத்தின் ஆற்றல்**

## கூட்டுச்செயல்பாடு
**ஒன்றாக பணிபுரிதலின் ஆற்றல்**

## கடமைப்பாடு
**பொறுப்புடைமையின் ஆற்றல்**

# நேர்மை

நியாயத்தின் ஆற்றல்

**நம் செயல்பாடுகள் அனைத்துக்கும் அஸ்திவாரம் நேர்மைதான்.**

நேர்மை மாறாதது. நாம் யாருடன் பணிபுரிகிறோம், வாழ்கிறோம் மற்றும் யாருக்கு சேவை வழங்குகிறோமோ அவர்கள் நம்மைச் சார்ந்து இருக்கக்கூடும். நாம் சொன்ன சொல்லுக்கு ஏற்பச் செயல்படுகிறோம். உறுதிமொழிந்ததைச் செய்து காட்டுகிறோம். நம்பிக்கை மூலமாகவே நாம் நமது புகழை உருவாக்கி வலுப்பெறச்செய்கிறோம். தவறான முறையில் மற்றவர்கள் மீது நாம் செல்வாக்கு செலுத்துவதும் கிடையாது, தவறான முறையில் மற்றவர்கள் செல்வாக்கை நாம் ஏற்பதும் கிடையாது. நாம் மரியாதைக்குரியவர்கள், வெளிப்படையான, நியாயமான முறையில் நடந்துகொள்கிறோம். சுருக்கமாகச் சொன்னால், இங்கே பணி புரிபவர்கள் எந்த அளவுக்கு தார்மீக முறையில் செயல்படுகிறார்களோ அதைப் பொறுத்தே நிறுவனத்தின் புகழ் என்பது அமைகிறது.

**நாம் நேர்மையை கடைபிடிக்கிறோம் என்று எப்போது சொல்லமுடியும் என்றால்...**

## நாம் நேர்மையாக இருக்கும் போதும் அப்படியே நடந்து கொள்ளும்போதும்.

மிக உயர்ந்த நிலையிலான நேர்மையையும் தார்மீக நடத்தைகளையும் நாம் கொண்டிருக்கிறோம். நாம் உண்மையையே பேசுகிறோம். நடைமுறை ரீதியில் எதை செய்து முடிக்க முடியுமோ அதற்கு மட்டுமே நாம் வாக்குறுதி அளிக்கிறோம். நமது கடமைப்பாட்டை நிறைவேற்றிக்காட்ட கடுமையாக உழைக்கிறோம். நமது நிறுவனத்தின் பங்குதாரர்கள், வாடிக்கையாளர்கள், டீலர்கள், விநியோகிப்பாளர்கள் மற்றும் நம்முடன் தொழில்புரியும் பிறர் அனைவரும் நமது சக ஊழியர்களும் நாம் சொல்வதை நம்ப வேண்டும். நாம் சொன்னச் சொல்லைக் காப்பாற்றுவோம் என்று நம் மீது நம்பிக்கை கொள்ள வேண்டும்.

## முரண்பாடுகளையும், நலன் முரண்பாடுகளையும் தவிர்க்கும் போதும் சமாளிக்கும் போதும்.

நமது சொந்த நலன்களுக்கும் நிறுவனத்தின் நலன்களுக்கும் இடையில் முரண்பாட்டை உருவாக்குகிற, அல்லது உருவாக்குவது போல தோன்றுகிற, எந்த செயலிலும் நாம் ஈடுபடக்கூடாது. ஒரு நிறுவன ஊழியருக்கு, தன் சுயநல, குடும்ப நல அல்லது பிற உறவுகளின் அடிப்படையில் வேறு தனிநலத்தின் காரணமாக, அவரால் நிறுவனத்தை முழுமையாகவும் நியாயமாகவும் பிரதிநிதித்துவப்படுத்த முடியாமல் போகும் போது இந்த பிரச்சனை எழுகிறது. நிறுவனத்தின் எந்த இடத்திலும் இந்த நலன் முரண்பாடு என்பது உருவாகலாம். ஒரு ஊழியர் அல்லது முன்னாள் ஊழியரைப் பொறுத்தவரை, நிறுவனத்தின் பணத்தை செலவு செய்யும் அதிகாரம் அவருக்கு உள்ளபோது அல்லது நிறுவனத்துக்கு வெளியே இருந்து ஒருவரை பணிக்கு அமர்த்தும் போது, அல்லது நிறுவனத்துக்கு வெளியேயுள்ள ஒருவருக்கு பலன் தரத்தக்க தகவலை கைவசம் வைத்திருக்கும் போது, மிக மோசமான நலன் முரண்பாடுகள் எழுவது வழக்கம். நிறுவனத்தின் ஊழியர் ஒருவருக்கு பரிசு, உபகாரம் அல்லது கேளிக்கை போன்றவை வழங்கப்படும் போது நலன் முரண்பாடு உருவாகிறது அல்லது அவ்வாறு தோற்றம் அளிக்கிறது. இவற்றில் சில வழக்கமான பிஸினஸ் நடைமுறைதான் என்றாலும், திருப்பி அளிக்க முடியாதபடி பெரிய மதிப்புள்ள மற்றும், சட்டம், கேட்டர்பில்லரின் பிஸினஸ் நலன் அல்லது கேட்டர்பில்லரின் பிஸினஸ் தார்மீக நடைமுறைகளை மீறி ஒரு செயலை செய்யுமாறு கட்டாயப்படுத்துகிற அல்லது கட்டாயப்படுத்துவதாகத் தோன்றுகிற பரிசுகள், உபகாரங்கள் மற்றும் கேளிக்கைகளை நாம் ஏற்கக் கூடாது.

# நியாயமாகப் போட்டியிடும் போது

ஒரு சுதந்தரமான நிறுவனத்துக்கு நியாயமான போட்டியிடுதிறன் அடிப்படையாகும் என கேட்டர்பில்லர் நம்புகிறது. நாம் பிசினஸ் செய்யும் இடங்களில், நம்பிக்கையின்மை மற்றும் போட்டியிடுதல் சட்டங்களை நாம் பின்பற்றுகிறோம். போட்டியாளர்கள், டீலர்கள், விநியோகிப்பாளர்கள், சப்ளையர்கள், வாடிக்கையாளர்கள் போன்றோரிடம் உறவு ஏற்படும் போது, அது எந்த விதத்திலும் மற்ற நிறுவனங்களோடு நாம் போட்டியிடுவதை தடங்கல் செய்ய முடியாத வகையில் ஏற்பாடு செய்து கொள்கிறோம். விலைகள், தயாரிப்புகள் விற்கப்படும் விதிமுறைகள் அல்லது உற்பத்திசெய்யப்படும் அல்லது விற்கப்படும் பொருட்களின் எண்ணிக்கை மற்றும் வகை ஆகியவற்றை பாதிக்கும் எந்தவிதமான முன்னேற்பாடுகள், புரிதல்கள் அல்லது ஒப்பந்தங்கள் ஆகியவற்றை நம்முடைய போட்டியாளர்களுடன் நாம் செய்து கொள்வதில்லை. உலகெங்கும் பிஸினஸை நடத்தும்போது, பொருத்தமான இறக்குமதி மற்றும் ஏற்றுமதி கட்டுபாடு சட்டங்களை நாம் பின்பற்றுகிறோம்.

# நமது நிதி அறிக்கைகளும் கணக்குப் பதிவேடுகளும் துல்லியமாகவும் முழுமையாகவும் இருக்கும்போது

முதலீட்டாளர்கள், கடன் வழங்குநர்கள் மற்றும் பிறரும் நமது நிறுவனத்தில் நிதி மற்றும் கணக்கு தகவல்களைப் பெற சட்டபூர்வ உரிமை உடையவர்கள். கேட்டர்பில்லரின் நிதி அறிக்கைகள் மற்றும் கணக்குப் பதிவேடுகள் ஆகியவை நேர்மையான முறையில் உள்ளன என்பதானது அவற்றின் நிரூபணத்தன்மை, துல்லியம், முழுமை, நேரம் கடக்காமை மற்றும் நிறுவனத்தின் கணக்குப் பதிவேடுகளில் உள்ள பதிவுகளுக்கு ஆதாரமான தகவல்கள் புரிதல் ஆகியவற்றைப் பொறுத்து ஆகும். ஆதார தகவல்களில் விவரிக்கப்பட்ட தகவல்களைத் துல்லியமாக ஒவ்வொரு கணக்கு பதிவு அல்லது நிதி உள்ளீடுகள் பிரதிபலிக்கின்றன என்பதை நாம் உறுதிசெய்கிறோம். அத்தகைய பதிவுகளை உருவாக்கி, சரிபார்த்து, பதிவுசெய்யும் ஊழியர்களே அதில் உள்ள தகவல்களின் நிஜத்தன்மைக்கு தனிப்பட்ட முறையில் பொறுப்பு உடையவர்கள் ஆவார்கள். புற கணக்கு அறிக்கைகளுக்கு பொருந்தும் அதே நேர்மைத் தரம்தான் நிறுவனத்துக்குள்ளான நிர்வாக செயல்பாடுகளின் போது பயன்படுத்தப்படும் அக நிதி அறிக்கைகளுக்கும் பொருந்தும்.

# நமது தொடர்புப்பாட்டில் நாம் நியாயமாக, நேர்மையாக, வெளிப்படையாக இருக்கும் போது

நாம் ஒருவரோடு ஒருவர் மரியாதையுடனும் நியாயமாகவும் நேர்மையாகவும் வெளிப்படையான முறையிலும் தொடர்பு கொள்கிறோம். நமது நிறுவனத்தைப் பற்றி பொருத்தமான மற்றும் புரிந்து கொள்ளும் வகையிலான நிதி மற்றும் பிற தகவல்களை தொடர்ச்சியாக வெளியிட்டு நமது முதலீட்டாளர்கள், கடன் வழங்குநர்கள், பங்கு சந்தை, ஊழியர்கள், டீலர்கள், விநியோகிப்பாளர்கள், சப்ளையர்கள் மற்றும் பொதுமக்கள் ஆகியோருக்கு உரிய தகவல்களை அளித்துக் கொண்டே வருகிறோம். கேட்டர்பில்லர் குறித்த தகவலை வெளியிடும் போது, எந்த தனி நபர் அல்லது குழுவுக்கும் சாதகமாக பாரபட்சம் காட்டாதவாறு, விவரங்களை முடிந்தவரை எல்லோருக்கும் முழுமையாகக் காட்ட முழு முயற்சி எடுப்போம். செய்தி ஊடகம், அரசாங்கம் மற்றும் பிற அமைப்புகள் உள்ளிட்ட பொது அமைப்புகளின் கேள்விகளுக்கு உடனடியாக, மரியாதையுடன், நியாயமான நேர்மையான பதில்களை நிறுவனத்தின் நிர்வாகத் தலைமை மூலமாகவும் மற்றும் கேட்டர்பில்லர் சார்பில் வெளியே பேச அதிகாரம் உடையவர்கள் மூலமாகவும் அளிப்போம்.

# “உள் தகவல்களை” பொருத்தமாகவும் சட்ட பூர்வமாகவும் கையாளும் போது

வெளியாருக்குத் தெரிவிக்கப்படாத, நிறுவனம் குறித்த தகவல்கள் அனைத்தும் உள் தகவல்கள் எனப்படுகின்றன. குறிப்பிட்ட சில நிதி விவரம், தொழில் நுட்ப விவரம் மற்றும் வருங்கால திட்டம் போன்றவை மற்றவர்களுக்கு மதிப்புவாய்ந்த தகவலாக இருக்கும் என்பதால் அவை முற்றிலும் இரகசியமாக காக்கப்படவேண்டும். கேட்டர்பில்லர் பற்றிய "முக்கியமான" உள் தகவலைக் கொண்டிருக்கும் எவரும் அவற்றை தன் சொந்த இலாபத்துக்காக பயன்படுத்தவோ மற்றவர்களுக்கு தரவோ கூடாது. கேட்டர்பில்லர் அல்லது வேறு ஒரு நிறுவனத்தில் முதலீடு செய்ய முக்கியம் என்று முதலீட்டாளர் ஒருவரால் கருதப்படுகிற எந்த ஒரு தகவலும் "முக்கியமானது" ஆகும். ஒரு சப்ளையர், வாடிக்கையாளர் அல்லது போட்டியாளர் குறித்த வெளியிடப்படாத தகவலை பெற்றிருக்கும் கேட்டர்பில்லர் ஊழியர் ஒருவர் அந்த நிறுவனங்களின் பங்குகளை வாங்கக் கூடாது. எல்லா ஊழியர்களும், அவர்களின் குடும்பத்தினரும், பிறரும், அதாவது கேட்டர்பில்லரின் தொடர்பால் இத்தகைய தகவலைப் பெற வாய்ப்புள்ளவர்கள் யாரும் இந்த கோட்பாடுகளுக்கு உடன்பட்டாக வேண்டும்.

# தவறான முறையில் பணம்தர மறுக்கும் போது

அரசு அதிகாரிகள், பிற நிறுவனங்கள், தனி நபர்களோடு தொடர்பு கொள்ளும் போது நாம் தார்மீக ரீதியான பிஸினஸ் நடைமுறைகளையே பின்பற்ற வேண்டும். நேரடியாகவோ மறைமுகமாகவோ லஞ்சம் அல்லது கையூட்டு கொடுத்தோ அல்லது தார்மீகமற்ற அல்லது நேர்மைக்கும் நியாயத்துக்குமான நமது புகழை களங்கப்படுத்தும் எந்த ஒரு செயலில் ஈடுபட்டோ மற்றவர்களை நம் வழிக்கு கொண்டுவர முயலக் கூடாது. இதுபோன்ற நடத்தைகள் இருப்பது போன்ற தோற்றத்தையும் நாம் கண்டிப்பாக தவிர்க்க வேண்டும்.

# செயல்சிறப்பு

தரத்தின் ஆற்றல்

**உயர் இலக்குகளை நிர்ணயிக்கிறோம், அத்துடன் சாதிக்கவும் செய்கிறோம்.**

கேட்டர்பில்லரின் சக்தியையும் பாரம்பரியத்தையும் பிரதிபலிப்பது நமது பொருள்கள் மற்றும் சேவையின் தரமே நாம் செய்வதிலும் சாதித்துக்காட்டுவதிலும் நாம் கொள்ளும் பெருமை அது. மக்கள், பொருள்கள், செயல்முறை, சேவை அளித்தல் தொடர்பாக செய்வனத்திருந்தச் செய்வதில் நாம் மிகுந்த ஆர்வம் கொண்டுள்ளோம். புதுமை, தொடர்ச்சியான மேம்பாடு, வாடிக்கையாளர் தேவை மீது இடையறா கவனம், மற்றும் அவற்றை அவசர கால அடிப்படையில் செய்து முடிக்கும் அர்ப்பணிப்பு ஆகியவற்றின் மூலம் நாம் நமது வாடிக்கையாளர்களுக்கு சேவை செய்ய உறுதி பூண்டுள்ளோம். நம்மைப் பொறுத்தவரை செயல்சிறப்பு என்பது ஒரு மதிப்பீடு மட்டுமல்ல; அது ஒரு ஒழுக்கம், உலகை மேலும் சிறப்பாக மாற்றுவதற்கான வழிமுறை.

**செயல்சிறப்புடன் செயல்படுகிறோம் என்றால் எப்போது...**

## நமது பொருட்கள் மற்றும் சேவைகள் சிறந்த தரத்துடன் மட்டுமே இருக்கவேண்டும் என்று முடிவு செய்கிறபோது

தரத்திற்கு முழுமையான அர்ப்பணிப்பை தருகிறோம். மேலும் நாம் வழங்கும் எல்லா பொருட்கள் மற்றும் சேவைகள் தொடர்பாக தனிப்பட்ட பெருமை கொள்கிறோம். வாடிக்கையாளர்களின் தேவைகள் மேலான நம்முடைய கூர்மையான கவனமானது, தரத்தை 6 சிக்மா வழியாக மேம்படுத்த தொடர்ந்து நம்மை இயக்குகிறது. நமது தொடர் வெற்றி என்பது வாடிக்கையாளர்களின் எதிர்பார்ப்பை விஞ்சுவதிலும் நாம் செய்யும் எல்லாவற்றிலும் உறுதியாக இருப்பதை பொருத்தும் அமைகிறது.

## நாம் நமது வாடிக்கையாளர்களுக்கு உயர்மதிப்பிலான சேவையை, உடனடியாக செய்துமுடிக்கும்போது

வாடிக்கையாளர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்ய முனைப்புடன் செயல்புரிகிறோம். வாடிக்கையாளர்கள் சொல்வதைக் கேட்பதிலும், அவர்களுடைய தேவைகளைப் புரிந்துகொள்வதிலும், அவர்களுக்கு வேண்டிய பொருட்கள் மற்றும் சேவைகள் வழங்குவதிலும் நாம் சிறப்பான பெருமதிப்பினை பெற்றுள்ளோம். நமது வாடிக்கையாளர்கள் எல்லாவற்றிலும் மிகவும் சிறந்தவற்றையே கேட்டர்பில்லரிடமிருந்து எதிர்ப்பார்க்கிறார்கள். நாமும் நமது தனிப்பட்ட முடிவுகள் மற்றும் செயல்பாடுகள் நிறுவனத்தின் உறுதியான முன்னேற்றத்தைப் புலப்படுத்தும் வகையிலும் வாடிக்கையாளர்களின் மனநிறைவை உறுதிப்படுத்தும் வகையிலும், நம்பிக்கையை மேம்படுத்தும் வகையிலும் இருக்கிறதா என்பதை உறுதி செய்துகொள்ள வேண்டும். இதைச் செய்ய, நாம் வழங்கும் பொருட்கள் மற்றும் சேவைகளில் சாத்தியமான மிக உயர்மதிப்பை வழங்க விரைவாக செயல்படுகிறோம். தரம், கேட்டர்பில்லர் உற்பத்தி அமைப்பின் வழிகாட்டுதல் தத்துவங்கள் ஆகியவற்றுக்கான நமது கடமைப்பாடு மற்றும் 6 சிக்மா மூலமான தொடர் மேம்பாடுகள் ஆகியவை இதை சாத்தியப்படுத்தியுள்ளன.

# செயல்சிறப்பை ஏற்கக்கூடிய பணிச்சூழலை உருவாக்குகிறபோது

கேட்டர்பில்லர் ஊழியர்கள் தங்களது சுய சாதனை, தொடர்ச்சியாக கற்றுக்கொள்ளுதல், மற்றும் தன் மதிப்பை உயர்த்திக்கொள்ளுதல் ஆகியவற்றுக்கு ஏற்ற வகையில் தமது வேலைச் சூழல் இருக்க வேண்டும் என எதிர்பார்ப்பார்கள். தங்களது செயல் திறன் மற்றும் நிறுவனத்தின் செயல்திறனை உயர்த்தும் என அவர்கள் நம்புகிற, நல்ல எண்ணத்தில் உருவாகிற, கருத்துக்களை வெளிப்படுத்தும் உரிமை ஊழியர்களுக்கு உண்டு. நாம் உற்சாகத்துடன் கலந்துரையாடி கூட்டு முயற்சியை ஊக்கப்படுத்தி, ஆதாரக்குறிப்புகள் மற்றும் தரவுகளின் அடிப்படையில் முடிவெடுக்க வேண்டும்.

# நாம் தொழிலாளர்களை அவர்களது தகுதிகள் மற்றும் செயல்திறன் அடிப்படையில் தேர்ந்தெடுத்து, பதவியளித்து, மதிப்பீடு செய்யும் போது

பணியாளர்களின் தனிப்பட்ட தகுதிகள், ஒரு பணிக்கான திறன்கள், நிரூபிக்கப்பட்ட செயல்திறன் மற்றும் கேட்டர்பில்லருக்கு அவர்கள் வழங்கும் பங்களிப்புகள் ஆகியவற்றின் அடிப்படையிலேயே கேட்டர்பில்லர், பணியாளர்களைத் தேர்வு செய்கிறது, பணியமர்த்துகிறது, மதிப்பிடுகிறது மற்றும் ஊக்கத்தொகைகளை வழங்குகிறது.

# நாம் ஊழியர்களுக்கு முன்னேறுவதற்கான வாய்ப்புகளைத் தரும்போது

ஊழியர்களை நாம் கேட்பது இவற்றையே. கடும் முயற்சி செய்து சிறப்பாக செயலாற்றுங்கள். உங்கள் வெற்றி தோல்விகளிலிருந்து பாடம் படித்துக்கொண்டு, வாய்ப்புகளை பயன்படுத்திக்கொண்டும் நிறுவனத்தில் தொடர்சியாக நடத்தப்படக்கூடிய பயிற்சித் திட்டங்கள் வாயிலாகவும் உங்கள் திறமையை வளர்த்துக்கொள்ள வேண்டும். ஊழியர்களின் சுயவளர்ச்சிக்கு நாம் ஊக்கம் தருகிறோம். மேலும் தற்போதைய வேலையில் அவர்கள் வல்லுநராக ஆகவும் வேலைத் திறனை மேம்படுத்திக்கொள்ளவும் அவர்களுக்கு துணைபுரிகிறோம். தங்கள் திறன்களை வளர்த்துக்கொள்ளவும் கேட்டர்பில்லரின் வெற்றிக்கு பங்களிக்கவும் நாம் நமது ஊழியர்களுக்கு வாய்ப்புகளை அளித்து உறுதிப்படுத்த கடமைப்பட்டுள்ளோம்.

# இடர் என்பதை நாம் சமாளிக்க கூடிய ஒன்றாகவும், வருங்கால வாய்ப்பாகவும் பார்க்கும்போது

ஏனெனில் பிஸினஸும் இடரும் பிரிக்கமுடியாதது என்பதை நாம் உணர்ந்திருக்கிறோம். நம்முடைய பிஸினஸுக்கு அதிக பாதிப்பை ஏற்படுத்தும் இடர்களை முன்னதாக கண்டறிந்து, மதிப்பிட்டு விரைந்து நடவடிக்கை எடுத்து சமாளிக்கவேண்டும். நாம் இடர்களை சமாளிக்க நேரிடும்போது அதை போட்டி நிறைந்த இந்த உலகில் புதிய தீர்வுகளை அளிப்பதற்கான வாய்ப்பாக மாற்ற முடியுமா எனப் பார்க்கவேண்டும்.

# நாம் “நிறுவனத்தின் கண்ணோட்டத்தில் பார்த்தல்" என்ற நிலையை எடுக்கிறோம்

"நிறுவனத்தின் கண்ணோட்டத்தில் பார்த்தல்" என்ற நிலையை எடுத்தல் என்றால், ஒட்டுமொத்தமாக நிறுவனத்துக்கு நன்மை அளிக்கும் சிறந்த செயல்பாடுகளை செய்வது என்று பொருள் ஆகும். நமது உள்ளூர் பிஸினஸ் யூனிட்களில் நம்முடைய வணிக வெற்றிகளுக்கு நிறுவனம் சார்ந்த சிந்தனையானது மிகவும் முக்கியமானது. நிறுவனம் சார்ந்த முடிவுகளை எடுக்கும்போது, நமது உள்ளூர் பிஸினஸ் யூனிட்கள் போட்டிரீதியான பின்னடைவை சந்திக்கக்கூடாது என்பதை உறுதிப்படுத்த கடுமையாக முயற்சிசெய்கிறோம்.

# கூட்டுச்செயல்பாடு

ஒன்றாக பணிபுரிதலின் ஆற்றல்

**வெற்றிபெற ஒருவொருக்கொருவர் உதவி செய்துகொள்கிறோம்.**

நாம் யாருடன் பணியாற்றுகிறோமோ வாழ்கிறோமோ யாருக்கு சேவை வழங்குகிறோமோ அவர்களுக்கு உதவிசெய்ய ஒவ்வொருவரும் தத்தம் தனிப்பட்ட திறன்களோடு இணைந்து அவற்றைப் பகிர்ந்து ஒரு குழுவாகப் பணியாற்றுகிறோம். நம் ஊழியர்களின் வெவ்வேறுபட்ட சிந்தனைகளும் முடிவெடுக்கும் திறன்களும் ஒன்று தேர்ந்து நம்முடைய குழுவை வலுவாக்குகிறது. வேறுபட்ட கருத்துகள், பின்புலம் மற்றும் அனுபவங்களைக் கொண்டவர்களை மதிக்கிறோம், அவர்களுடைய பங்களிப்புக்கு மதிப்பு இருப்பதை ஏற்கிறோம். செயல்பாட்டின் முழு சித்திரத்தை முதலில் புரிந்துகொள்ள முயல்கிறோம், பிறகு நமது பங்கை ஆற்றமுயல்கிறோம். நாம் ஒவ்வொருவரும் தனிப்பட்ட முறையில் அடையக்கூடிய முடிவுகளை விட கூடிச் செயல்படும்போது இன்னும் சிறப்பான முடிவையே அடைகிறோம் என்பதை நாம் அறிவோம்.

**கூட்டுச்செயல்பாட்டை நாம் எப்போது செயல்படுத்துகிறோம் என்றால்...**

## மற்றவர்களை நாம் மதிப்போடு நடத்தும்போது, அச்சுறுத்தலையோ தொல்லையையோ சகித்து ஏற்காத போது

நாம் எதிர்பார்க்கிற அதே அளவு மதிப்பு, நம்பிக்கை, கவுரவம் ஆகியவற்றை நாம் மற்றவர்களுக்கு அளித்து அவர்களை நல்லபடியாக நடத்தும் போதுதான் ஒவ்வொரு தனிநபரின் பங்களிப்பின் முழுமையான மதிப்பு நடைமுறைப்படுத்தப்படுவதாக சொல்லமுடியும். அச்சுறுத்தல் மற்றும் தொல்லைக்கு உட்பட வேண்டிய சூழல் இல்லாத பணிச்சூழலை கேட்டர்பில்லர் வலியுறுத்துகிறது. சாதகமான பணிச்சூழலை எதிர்பார்ப்பது தனிப்பட்ட முறையில் ஒவ்வொரு ஊழியரின் உரிமையாகும். இந்த கொள்கைக்கு மாறான நடைமுறை இருந்தால் அது குறித்து கேள்வி கேட்கவும் மாற்ற வேண்டும் என்று கேட்கவும் அவர்களுக்கு பொறுப்பு இருக்கிறது.

## மற்றவர்களை நியாயமாக நடத்தும்போது, பாகுபாட்டைத் தடுக்கும் போது

எல்லா ஊழியர்களையும் நியாயமாகவும் சமமாகவும் நடத்தி ஆக்கத்திறன் வாய்ந்த, ஊக்கமுள்ள ஊழியர் படையை நாம் உருவாக்கி நிர்வகித்து வருகிறோம். ஊழியர்கள் மற்றும் பிற பலன்தாரர்களின் பங்களிப்பை நாம் மதித்து அங்கீகரிக்கிறோம். நிறஇனம், மதம், தேசியம், உடல்நிறம், பாலினம், பால் நாட்டம், பாலியல் அமைப்பு, வயது மற்றும்/அல்லது உடல்சார் அல்லது உளம்சார் இயலாமை ஆகிய எந்த ஒன்றின் அடிப்படையிலும் இல்லாமல், பொருத்தமான மற்றும் தேவையான விஷயங்களை கருத்தில் கொண்டு, ஒரு செயலைச் செய்வதற்கான ஒருவருக்குள்ள தகுதியின் அடிப்படையிலேயே அவரை வேலைக்கு தேர்ந்தெடுக்கவும் பணியமர்த்தவும் செய்கிறோம். நாம் பிஸினஸ் செய்யும் எந்த இடத்திலும் அங்கே பாகுபாட்டுத் தடைகள் இருந்தால் அவற்றை ஏற்பதுடன் பின்பற்றவும் செய்கிறோம். யூனியன் அல்லது வேறு ஒரு மூன்றாம் அமைப்பின் தேவை என்கிற உணர்வு ஊழியர்களுக்கு ஏற்படாத வண்ணம் நாம் நமது பிஸினஸ் நடவடிக்கைகளை மேற்கொள்ள எதிர்ப்பார்க்கப்படுகிறோம். ஒரு இடத்தில் இதுபோன்ற அமைப்பு ரீதியிலான பிரதிநிதித்துவத்தை ஊழியர்கள் தேர்ந்தெடுத்தாலோ அல்லது சட்டரீதியில் அதற்கான தேவை இருந்தாலோ, அத்தகைய பிரதிநிதிகளுடன் நேர்மையான, பிஸினஸ்த்தனமான முறையிலான அணுகுமுறையை மேற்கொள்வோம்.

## நெருக்கமான சூழலை உருவாக்கும்போது

ஊழியர்களின் தனித்தன்மையையும், அந்த வேறுபாட்டைச் சார்ந்து முடிவெடுக்க கூடியவை அல்ல என்பதையும் நாம் புரிந்துகொள்கிறோம் மற்றும் ஏற்றுக்கொள்கிறோம். கேட்டர்பில்லர் ஊழியர்கள் மிகச் சிறந்த பிஸினஸ் மற்றும் சொந்த பலன்களைப் பெறும் வகையில் அவற்றுக்கு சாதகமாக உள்ள தனிநபர்களின் பிரத்யேக அறிவு, திறன்கள், திறமைகள், கலாச்சாரங்கள் மற்றும் அனுபவங்களை நாம் மதிக்கிறோம். பலவிதமான கருத்துகளை காது கொடுத்து கேட்கவும் அவற்றை பெறுவதற்கு தயாராக இருக்கவும் செய்யும்போது நாம் பெறுகிற வித்தியாசமான அபிப்பிராயங்கள் கேட்டர்பில்லருக்கு நன்மையையே செய்கின்றன - நிறுவனத்தை வலுப்படுத்தும், மேலும் வெற்றிகரமாக்கும் தீர்மானங்களை எடுக்கும் போது இந்த புதுமையான தீர்வுகளும் முறைகளும் நமக்கு உதவுகின்றன.

## ஒரே மாதிரியான உலகளாவிய தரநிலைகளுடன் நாம் உலகெங்கும் பிஸினஸை நடத்துகிறோம்

உலகத்தில் பல்வேறு விதமான அரசு முறைகளும் பொருளாதார மற்றும் அரசியல் சித்தாந்தங்களும் உள்ளன என்பதை உலகளாவிய நிறுவனமான நாம் அறிவோம். நாம் செயல்படும் நாடுகளில் பலவித சமூக வழக்கங்களும் கலாச்சார மரபுகளும் உள்ளன என்பதையும் நாம் அறிந்திருக்கிறோம். அந்த வித்தியாசங்களை நாம் மதிக்கிறோம். இந்த நடவடிக்கை நெறிமுறைகளில் கூறப்பட்டுள்ள வழிமுறைகளுக்கு பொருந்தும் பட்சத்தில், அந்த அளவுக்குட்பட்டு, அத்தகைய சூழலுக்கு ஏற்ப நமது பிஸினஸ் நடைமுறைகளை நாம் நெகிழ்வாக வைத்துக்கொள்வோம். நிறுவனம் மிகச்சிறந்த லாபம் ஈட்ட நமது உலகளாவிய அனுபவங்களைப் பயன்படுத்திக்கொள்கிறோம்.

# நிறுவனத்துக்கு வெளியே முக்கிய நிறுவனங்களுடனும் அமைப்புகளுடனும் ஒத்துழைக்கும்போது

நமது வாடிக்கையாளர்கள், டீலர்கள், விநியோகிப்பாளர்கள், சப்ளையர்கள், முதலீட்டாளர்கள் மற்றும் நாம் பிஸினஸ் செய்யும் மற்றவர்கள் என அனைவருடனும் நீண்டகால நோக்கிலும் பரஸ்பரம் லாபம் அளிக்கும் நோக்கிலும் நாம் மேற்கொள்ளும் உறவின் வெளிப்பாடுதான் நிறுவனத்தின் வலிமையும் நீடிப்புத்திறனுமாகும். இந்த பிஸினஸ் பங்காளர்களுடனும் அரசு மற்றும் அரசு சாரா அமைப்புகளுடனும் அர்த்தமுள்ள வகையில் கூட்டுச்செயல்பாடுகளை நாம் மேற்கொள்கிறோம். அவர்கள் கூறுவதைக் கேட்டு, அறிந்து, அதற்கேற்ப புதுமைத் தீர்வை காணுகிறோம். திட்டமிட்டு, நம்பும் வகையில் நாம் செயல்படுவதன் மூலம் அவர்களுடனான உறவை பலப்படுத்திக்கொள்ள எப்போதும் உழைக்கிறோம்.

# நமது டீலர்கள் மற்றும் விநியோக நெட்வொர்க்கில் உள்ள விநியோக சானல் உறுப்பினர்களுடன் நீடித்து நிற்கும் உறவை மேற்கொள்ளும்போது

நமது நிறுவனத்துக்கும் உலகம் முழுவதிலும் உள்ள நமது வாடிக்கையாளர்களுக்கும் இடையில் முக்கியமான இணைப்பாக திகழ்பவர்கள் நமது டீலர்களும் விநியோக சானல் உறுப்பினர்களுமேயாவார்கள். கேட்டர்பில்லரின் வெற்றிக்கு காரணமான மிகச்சிறந்த நெடுங்கால நோக்கிலான வாடிக்கையாளர் சேவையை உருவாக்கவும் நிர்வகிக்கவும் நாம் அவர்களையே சார்ந்திருக்கிறோம். நமது புகழுக்கு சாதகமான வகையில் பங்களிப்பதற்காகவும் அவர்கள் அவர்களுடைய வாடிக்கையாளர்களுக்கும் சமூகங்களுக்கும் ஆழ்ந்த கடமைப்பாட்டுடன் சேவை அளிப்பதற்காகவும் நாம் மதிக்கிறோம். நம்பிக்கை, தகவல் தொடர்பு, பலன்களைப் பகிர்ந்துகொள்ளுதல் என மிகச்சிறந்த வழிமுறைகள் மூலமாக அவர்களுடனான உறவை நாம் வலுப்படுத்தி வருகிறோம். உலகம் எங்கும் உள்ள வாடிக்கையாளர்களுக்கு பொருள்களையும், சேவைகளையும், உதவி ஏற்பாடுகளையும் அளிக்க, நாம் அவர்களுடன் தொடர்ந்து செயல்படுகிறோம்.

# நமது சப்ளையர்களை நமது பிஸினஸ் கூட்டாளிகளாகவே பார்க்கும் போது

சப்ளையர்களுடன் வலுவான, பரஸ்பரம் நன்மையளிக்கக்கூடிய பிஸினஸ் உறவுநிலைகளை உருவாக்க முயற்சிக்கிறோம். ஏனெனில் அவர்கள்தான், நெருக்கமான கூட்டுப்பணிகளின் மூலமாக நம்முடைய பொருட்கள் மற்றும் சேவைகளின் மதிப்புகளை மேம்படுத்துகின்றனர். சப்ளையர்களை நிறுவனத்தின் விரிவு என்றே நாம் கருதுகிறோம் மற்றும் அவர்களே நீட்டிக்கப்பட்ட மதிப்பீட்டு சங்கிலியின் முக்கியமான அங்கமாக உள்ளனர். வலுவான மதிப்பீடுகளும் தார்மீகக் கொள்கையும் கொண்ட, தரத்துக்கு உத்தரவாதம் அளிக்கிற சப்ளையர்களையும் பிற பிஸினஸ் அமைப்புகளையும் நாம் வரவேற்கிறோம். சட்டத்தை மீறுகிற அல்லது நாம் முன்வைக்கும் பிஸினஸ் நடைமுறைகளை ஏற்காதவர்களை நாம் புறக்கணிக்க விரும்புகிறோம். பிஸினஸ் பெறவோ சப்ளையராகத் தொடரவோ எந்த சப்ளையரும் கேட்டர்பில்லரின் பொருள்களை வாங்கவேண்டிய கட்டாயமில்லை. கேட்டர்பில்லர் தொழிலகங்களில் வேலை செய்யும் போது கேட்டர்பில்லர் பொருள்களை பயன்படுத்துதல் அல்லது வேறு இடத்தில் பொருத்தமான கேட்டர்பில்லர் பொருள்களை அளித்தல் ஆகியவை தொடர்பாக, சட்டத்துக்குட்பட்டு, சப்ளையர்களை அவ்வாறு கேட்பதற்கான உரிமையை நாம் பெற்றிருப்போம். நமது வருங்கால சப்ளையர்கள், கான்ட்ராக்டர்கள் மற்றும் பிற சேவை அளிப்பாளர்களை ஆரோக்கியமாக போட்டிப் போடுமாறு உற்சாகம் அளிக்கிறோம். எல்லோருடனும் சம அடிப்படையிலும் கணிசமான அளவிலும் நாம் இணைந்து தொழில்புரிகிறோம்.

# கடமைப்பாடு

பொறுப்புடைமையின் ஆற்றல்

**நமது பொறுப்புகளை நாம் ஏற்கிறோம்.**

தனிநபர் ரீதியிலும் கூட்டாகவும் நாம் அர்த்தமுள்ள பொறுப்புகளை ஏற்கிறோம் - முதலில் நமக்கு நாமே பொறுப்பாளியாக இருக்கவும் பிறகு நாம் யாருடன் பணியாற்றுகிறோமோ, வாழ்கிறோமோ, யாருக்கு சேவை அளிக்கிறோமோ அவர்களுக்கு பொறுப்பாளியாக இருக்கவும் வேண்டி இதை செய்கிறோம். நமது வாடிக்கையாளர்களின் தேவைகளையும் விருப்பங்களையும் புரிந்துகொண்டு முக்கியத்துவம் அளிக்கிறோம். நாம் உலகக் குடிமக்கள். பாதுகாப்பு, சுற்றுச்சூழலை காப்பது, தார்மீக முறையில் தொழில்நடத்துவது என்பனவற்றில் அர்ப்பணிப்புள்ள பொறுப்பு வாய்ந்த சமூக உறுப்பினர்கள் நாம். கேட்டர்பில்லரின் பாரம்பரிய பெருமையை மேலும் முன்னெடுத்துச்செல்வது நமது கடமை, அது நமக்கு கிடைத்த கௌரவமும் ஆகும் என்பதை அறிவோம்.

**நாம் எப்போது கடமைப்பாட்டை செயல்பாட்டில் கொண்டுவருகிறோம் என்றால்...**

## நாமும் பிறரும் ஆரோக்கியமாகவும் பாதுகாப்பாகவும் இருக்க உரிய பாதுகாப்புகளை செய்யும்போது

நமது மக்கள் பாதுகாப்பான வேலை சூழலையும் இப்போதும் பிறகும் ஆரோக்கியமான, ஆக்கபூர்வமான வாழ்நிலையும் பெறக்கூடிய உலகளாவிய சூழல் ஒன்றை உருவாக்கவே நாம் அனைவரும் ஒரு நிறுவனம் என்ற முறையில் கடுமையாக உழைக்கிறோம். தனிநபர்கள் தங்களையும் சக ஊழியர்களையும் பாதுகாக்கும் விதத்தில் கொள்கைகளையும் நடைமுறைகளையும் அமல்படுத்தி நாம் ஊழியர்களின் ஆரோக்கியத்தையும் பாதுகாப்பையும் காத்திட துடிப்பாக முயல்கிறோம். ஊழியர்களாகிய நாம், நம்முடைய மற்றும் பிறருடைய உடல்நலம் மற்றும் பாதுகாப்பை உறுதிசெய்யும் விதமாக பணிச்சூழலில் பாதுகாப்பை முதன்மையானதாக கடைபிடிக்கிறோம். சப்ளையரிலிருந்து இறுதி வாடிக்கையாளர்கள் வரை, நமது மதிப்புச் சங்கிலி முழுக்கவும் பாதுகாப்பையும் பாதுகாப்பு நடைமுறைகளையும் நாம் மேம்படுத்துகிறோம். ஒரு சந்தையில், நம்பகமானதாகவும் பாதுகாப்பானதாகவும் இருக்குமாறு நம்முடைய பொருட்களையும் சேவைகளையும் வாடிக்கையாளர்களுக்கு வழங்க நாம் கடமைப்பட்டுள்ளோம்.

## நிலைபெறு வளர்ச்சியின் மூலம் சுற்றுச்சூழல் பொறுப்புடைமைக்கு உதவும்போது

வாடிக்கையாளர்களுக்கு, அவர்களுடைய செயல்பாடுகளின் நிலைபெறுதன்மையை மேம்படுத்தும் விதமான தீர்வுகளை வழங்குவதன் மூலம் ஸ்டாக்ஹோல்டர் மதிப்பீட்டை உருவாக்க கடுமையாக முயற்சி செய்கிறோம். நம்முடைய செயல்திறன் மற்றும் உற்பத்திறனை மேம்படுத்தி சுற்றுச்சூழலில் ஏற்படுத்தும் பாதிப்புகளைக் குறைக்கும் விதமாக தொழில்நுட்பம் மற்றும் புத்தாக்கத்தின் துணையை நாம் நாடுகிறோம். நமது வாடிக்கையாளர்கள், டீலர்கள், விநியோகிப்பாளர்கள் மற்றும் சப்ளையர்கள் ஆகியோருக்கு உதவும், புதிய பிஸினஸ் வாய்ப்புகளை உருவாக்குகிறோம். நம்முடைய பொருட்கள் மற்றும் சேவைகள், ஆரம்பக்கட்டத்தில் விற்கப்படும் இடத்தில் உள்ள பொருந்தும் ஒழுங்குமுறைகள் மற்றும் தரநிலைகளை சந்திக்கும் அல்லது அதைவிட விஞ்சி நிற்கும். சாத்தியமான நிலைபெறு வளர்ச்சியை உருவாக்குவதற்கான நம்முடைய கடமைப்பாட்டைப் பகிர்ந்துக்கொள்ளக்கூடிய தொழிற்துறை மற்றும் சமூக செயல்பாடுகளை நாம் செய்கிறோம்.

# நாம் தனிப்பட்ட முறையில் பொறுப்பேற்கும் போது

கேட்டர்பில்லரின் வெற்றிக்கு நாம் கடமைப்பட்டுள்ளோம். தனிப்பட்ட மற்றும் கூட்டான இலக்குகளை எட்டுவதற்கு நாம் ஒவ்வொருவரும் தனிப்பட்ட முறையில் கடமைப்பட்டவர்களாக இருக்கிறோம். ஸ்டாக்ஹோல்டர் மதிப்பீட்டை உயர்த்துவதற்கு, நாம் ஒவ்வொருவரும் தனித்தனியாக பொறுப்புடையவர்களாக இருப்பதன் மூலம் நாம் தலைமைத்துவத்தைக் காட்டுகிறோம்.

# நமது அசையா சொத்துகள், பிராண்டுகள், மற்றும் பிற அறிவுசார் உடைமைகள் ஆகியவற்றைப் பாதுகாக்கும்போது

நமது சொத்துக்கள் அனைத்தையும் பேணிகாக்க, பாதுகாக்க, பொறுப்புடன் பயன்படுத்த நாம் எல்லாவகையிலும் முயற்சி எடுக்கிறோம். அசையா சொத்துகள் மட்டுமல்ல புலனாகாத சொத்துக்களான பிராண்டுகள், தொழில்நுட்பம், பிஸினஸ் தகவல், அறிவுசார் மூலதனம் போன்றவையும் இதில் அடங்கும். நாம் நிறுவனத்தில் வேலை செய்யும்போது மட்டுமல்ல, அதற்கு பிறகும்கூட, நமது நிறுவனம், நமது வாடிக்கையாளர்கள், அதன் டீலர்கள், சப்ளையர்கள், தொடர்பான முக்கியத் தகவல்களையும் அல்லது அங்கீகாரம் தரப்படாநிலையில் உள்ள தொழில் ரகசியங்களையும் வெளியிடமாட்டோம். நிறுவனம் தொடர்பான தகவல்களை மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்ளும்போது, நம்முடைய ரகசியங்களைக் காத்துக்கொள்ள முறையான கட்டுப்பாடுகள் உள்ளதா என்பதை நாம் உறுதிசெய்கிறோம். பல வகை தொழில்நுட்பத் துறைகளில் அறிவும் அனுபவமும் வாய்ந்த நபர்களை நாம் பணிக்கு எடுக்கும்போது பிறருடைய தொழில் ரகசியங்களை அல்லது முக்கிய தகவல்களைத் தெரிந்துகொள்ளும் வழியாக அவர்களைப் பயன்படுத்திக்கொள்ளமாட்டோம். நமது நிறுவனத்தின் சொத்துக்களை இழப்பு, திருட்டு அல்லது துஷ்பிரயோகம் போன்றவை பாதிக்காத வகையில் எல்லாவிதமான பொருத்தமான நடவடிக்கைகளையும் எடுப்பது நமது சொந்த பொறுப்பேயாகும்.

# நமது ரகசிய தகவலை நாம் பாதுகாக்கும்போது

நம்மிடம் இருக்கும் ஒவ்வொரு தகவலும் நமது சொத்தேயாகும். அவற்றில் சில தகவல்களை மட்டும் நாம் விளம்பரம், பொருள் விவரம், பத்திரிகைச் செய்திகள், பொது நிதி அறிக்கை ஆகியவற்றின் மூலம் வெளிப்படுத்துகிறோம். மீதமுள்ள அனைத்தையும் வணிக ரகசியங்கள், ரகசியமான நிதி தகவல்கள், புதிய பொருள் அல்லது சேவை உருவாக்க திட்டங்கள் மற்றும் பிற முக்கியமான நிறுவன மற்றும் தனிநபர் தகவல்கள் நம்முடைய தகவல் பாதுகாப்பு வழிகாட்டுதல்கள் மற்றும் நபர்களுக்கு இடையேயான தகவல் தொடர்பு, பொருத்தமான நிறுவன தகவல் நிர்வாகம், எல்லா தொடர்பு ஊடகங்களையும் பாதுகாப்பாக கையாள்வது மற்றும் பொருந்தும் இடங்களில் சட்டப்பூர்வமாக நடைமுறைப்படுத்தத்தக்க ஒப்பந்தங்கள் ஆகியவற்றின் மூலம் கவனமாக பாதுகாக்கிறோம்.

# எலெக்ட்ரானிக் தொடர்புப்பாட்டு தொழில்நுட்பங்களை பொறுப்பாகவும் நிபுணத்துவத்துடனும் பயன்படுத்தும்போது

நமது அன்றாட பிஸினஸ் செயல்பாட்டில் மின்னணு தகவல் தொடர்பு மிக முக்கிய இடத்தை பெற்றுள்ளது. இணைய அணுகல் மற்றும் கேட்டர்பில்லர் இன்ட்ராநெட் அமைப்புகள், மின்னஞ்சல், தொலைபேசிகள், தொலைநகல் கருவிகள் மற்றும் மொபைல் சாதனங்களைப் பயன்படுத்துதல் அவசியமாகும். அங்கீகாரம் வழங்கப்பட்ட தனிநபர்கள் மூலம் சட்டபூர்வமான பிஸினஸ் நடவடிக்கைகள் மேற்கொள்ளவும் சாதகமான, நிபுணத்துவ பிஸினஸ் சூழல் உருவாகவுமே இந்த தொழில்நுட்ப வசதிகளை நாம் அனுபவிக்கிறோம். ஊழியர்களாக, நாம் அந்த தொழில்நுட்பத்தை, பொறுப்பான, பணிக்குரிய வகையில் நன்னடத்தை மற்றும் நிறுவன கொள்கைகளுக்கு இணங்கியபடி பயன்படுத்த வேண்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறோம்.

# தனிநபர்களின் தகவல் ரகசியத்தை நாம் ஏற்கிற, மதிக்கிற போது

தனிநபர்களின் சொந்த தகவல்களின் தனித்துவத்தை நாம் ஏற்கிறோம், மதிக்கிறோம். பிஸினஸுக்குத் தேவையான அல்லது பொருத்தமான தகவல்களை மட்டுமே அதுவும் சட்டபூர்வமான, முறையான வகையில் மட்டுமே துல்லியமாக பெறுகிறோம். கேட்டர்பில்லர் அல்லது கேட்டர்பில்லரின் பிஸினஸ் கூட்டாளிகளின் அலுவலகங்கள் எங்கெல்லாம் அவ்வாறு நாம் திரட்டிய தனிநபரின் சொந்த விவரங்கள் அடங்கிய தகவல் தொகுப்புகள் உள்ளதோ அவற்றின் பாதுகாப்பையும் ரகசியத்தையும் நாம் உத்தரவாதப்படுத்துகிறோம். சட்டத்துக்குட்பட்ட நிலையில் பிஸினஸ் தேவைகளுக்காக மட்டும் அந்த தகவல்களை பெறும் வாய்ப்பு உள்ளவர்களுக்கு மட்டுமே என அவற்றை அடையும் உரிமையை மட்டுப்படுத்தியிருக்கிறோம்.

## நமது சமூகத்தில் நாம் செயல்முனைப்புள்ளவர்களாக இருக்கும்போது

உலகம் முழுவதும் நாம் வாழும் சமூகங்களில் அவற்றின் ஆரோக்கிய, பொதுநல மற்றும் பொருளாதார நிலைத்தன்மைக்கான செயல்பாடுகளை மேம்படுத்த தனிநபர் என்கிற முறையிலும் நிறுவனம் என்கிற முறையிலும் நாம் கணிசமான அளவுக்கு நேரத்தையும் வளத்தையும் செலவழிக்கிறோம். பொது நலனை மேம்படுத்துவதற்கான சமூக சேவைகளில் பங்கேற்குமாறு எமது ஊழியர்கள் அனைவரையும் ஊக்குவிக்கிறோம். நாம் வாழும் பணிபுரியும் சமூகங்களில் வாழ்க்கைத் தரம் மேம்பட வளம் பெருகி நிலைக்க நமது வெற்றி தனக்குரிய பங்கைச் செலுத்த வேண்டும் என்று நாம் நம்புகிறோம்.

## பொறுப்புள்ள உடைமை மற்றும் முதலீட்டு முடிவுகளை நாங்கள் எடுக்கிறோம்

நாம் பிஸினஸ் செய்யும் நாட்டின் சமூக மற்றும் பொருளாதார முன்னுரிமைகள், உள்ளூர் சட்டம், வழக்கங்கள், பாரம்பரியம் ஆகியவற்றுக்கு ஏற்றவாறே கேட்டர்பில்லரின் முதலீட்டு முடிவுகள் அமையவேண்டும். இத்தகைய விவகாரங்கள் எதிலும் நமது செயல்பாடுகள் நிறுவனத்துக்கு ஏற்பும் மதிப்பும் அதிகரிக்க வேண்டும் . அதைப் போலவே நாம் பிஸினஸ் செய்யும் நாடுகளும் நமது ஸ்திரத்தன்மை, வளர்ச்சி மற்றும் பிஸினஸ் ரீதியிலான வெற்றி ஆகியவற்றை அங்கீகரிக்கவேண்டும் என்று எதிர்பார்ப்போம். பிற நாட்டு குடிமக்களின் உரிமைகள் மற்றும் உடைமைகள் தொடர்பானவை உள்ளிட்ட அம்சங்களில் அவர்களது ஒப்பந்தத்தை அவர்கள் மீறமாட்டார்கள் என்றும் எதிர்பார்க்கிறோம்.

## பொருத்தமான வகையில் பொது விவகாரங்களில் கலந்துகொள்ளும்போது

தங்கள் தனிப்பட்ட நம்பிக்கைகள் மற்றும் குடிமக்கள் உரிமைகளின் அடிப்படையில் நமது ஊழியர்கள் பொது விவகாரங்களிலும் அரசியல் விவகாரங்களிலும் பங்கெடுப்பது குறித்து சுதந்தரமாக செயல்படலாம். அவ்வாறு பொது விவகாரங்களிலோ அரசியல் விவகாரங்களிலோ பங்கெடுக்கும் போது தனிப்பட்ட குடிமகன் என்கிற அடிப்படையில் தனிப்பட்ட நபர் என்கிற அளவில் மட்டுமே அது இருக்கிறது என்பதையும் அது நிறுவனத்தின் சார்பான பங்கெடுப்பு இல்லை என்பதையும் நினைவில் வைத்துக்கொள்ளவேண்டும். சம்பந்தப்பட்ட அனைவருக்கும் இதை தெளிவுபட விளக்கிவிடவேண்டும். கேட்டர்பில்லரின் வெற்றிக்கு, முக்கியமான, பொது கொள்கை விவகாரங்களில் நிறுவனம் ஈடுபடுகிறது, மேலும் தனிநபர்கள் அரசியல் பங்களிப்புகள் செய்வதை ஊக்குவிக்கும் குழுக்களை ஆதரிக்கிறது, மேலும் வெவ்வேறு காலக்கட்டத்தில்ஷைதலைவரின் ஒப்புதலுக்கு பின்னர்ஷைசட்டம் அனுமதிக்கும் வரம்பு வரை அவர்கள் அரசியல் பங்களிப்புகளைச் செய்யலாம்.

## நிறுவன கொள்கைகள் மற்றும் கூடுதல் தகவல்

நிறுவன கொள்கைக் கடிதங்கள் மற்றும் நிறுவனத்தின் விலாவரியான நிறுவனக் கொள்கைகளை அறியவும் நன்னடத்தை நெறிமுறைகள் குறித்து கூடுதல் விவரம் மற்றும் வழிமுறைகளை அறியவும் ஊழியர்கள் நிறுவனத்தின் இன்ட்ராநெட்டில் (புதிய விதிமுறை இன்ட்ராநெட் சைட் - https://codeofconduct.cat.com) பார்க்கலாம். அல்லது, முன்பே பட்டியலிடப்பட்டுள்ள ஆபிஸ் ஆஃப் பிஸினஸ் பிராக்டிஸஸைத் தொடர்புகொள்ளலாம். இந்த நன்னடத்தை நெறிமுறைகள், பொதுமக்கள் பார்வைக்கு http://www.cat.com/Code-of-Conduct என்ற முகவரியில் கிடைக்கிறது. இந்த நன்னடத்தை விதிமுறைகள் பதிப்பிக்கப்பட்ட சமயத்தில் நடைமுறையில் உள்ள கொள்கைக் கடிதங்களை இங்கு பார்க்கவும்.

- நம்பிக்கையின்மை
- பிஸினஸ் பொழுதுபோக்கு, உபகாரம் மற்றும் பரிசுகள்
- பாகுபாட்டு அரசியல் மற்றும் பொது விவகாரம் குறித்த நிறுவன கோட்பாடு
- கருத்து வேறுபாடுகள்
- தரவு ரகசியக்காப்பு
- நிறுவன வசதிகள்
- தடையற்ற வர்த்தகம்
- பொருத்தமற்ற வெகுமதிகள்
- அறிவுசார் சொத்து உரிமைகள்
- சொத்துக்களை பாதுகாத்தல்
- பொது தொடர்புப்பாடுகள்

## விலக்கு

நமது நிறுவனத்தில், மற்றவர்களை முன்னின்று வழிநடத்தும் ஊழியர்கள், "நடத்தை மீறாமை" என்பதன் பொருள் என்ன என்பதற்கு எடுத்துக்காட்டாக நடந்து காட்டும் விசேஷ பொறுப்பைக் கொண்டுள்ளனர். இதன் விளைவாக, ஒரு செயல் அலுவலர் அல்லது இயக்குநருக்கு நன்னடத்தை நெறிமுறையிலிருந்து விலக்கு அளிப்பதை போர்டு ஆஃப் டைரக்டர்கள் மட்டுமே செய்யலாம்.

CATERPILLAR®

TODAY'S WORK. TOMORROW'S WORLD.™

© 2010 கேட்டர் பில்லர் எல்லா உரிமைகளும் பதிவுசெய்யப்பட்டவை அமெரிக்காவில் அச்சானது

CAT, CATERPILLAR, மற்றும் தொடர்புடைய லோகோக்கள் மற்றும் இங்கே பயன்படுத்தியுள்ள கார்ப்பேரட் மற்றும் பொருள் பெயர்கள் அனைத்தும் கேட்டர்பில்லரின் ட்ரேட்மார்க்குகள் ஆகும். அனுமதி இல்லால் அவற்றைப் பயன்படுத்தக்கூடாது.